# நாட்டின் உயர்ந்த அரசியல் நதி - கலைஞரை வாழ்த்துகிறேன்!





“தாயே தமிழே! உன் தலை மகனை, என் நண்பனை, இந்த நாட்டின் சிறந்த அறிவாளியை, உயர்ந்த அரசியல் நதியை, வாழ வை! தமிழ்த் திரையுலகம் கலைஞருக்கு, என் உயிர் நண்பனுக்கு ஒரு சிறந்த விழா எடுத்து, எவ்வளவோ பெரியவர்கள் இருந்தும் என்னை தலைமை தாங்கப் பணித்தார்களே, இதனைவிட அவர்கள் எனக்கு மாபெரும் சிறப்பினைச் செய்ய முடியாது.

கோடி கோடியாய் கொட்டிக்கொடுத்தாலும் இதனை விட சிறப்பு கிடைக்காது. எப்போது மாபெரும் கலையுலகம், கலைஞர் அவர்களுக்கு விழா எடுப்பது, நான் எப்போது அதற்கு தலைமை தாங்குவது, அப்படியொரு சந்தர்ப்பம் அவருக்கு கிடைக்கலாம். எனக்கு கிடைக்கிறதோ, இல்லையோ... ஆகையால் இவர்கள் எடுத்துக் கொடுத்த இந்த மாபெரும் வாய்ப்பினை, இந்த மாபெரும் சந்தர்ப்பத்தை என் உளமார வரவேற்கிறேன். சிவாஜி தலைமை தாங்கலாம் என்று என் நண்பன் கலைஞர் வாய்ப்பு கொடுத்தாரே அதனை நான் மனமார வரவேற்கிறேன். இந்த கலையுலக பிள்ளைகளுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் அருமை நண்பனைப் பற்றி நான் என்ன பேசுவது? கலைஞர் அவர்களே... உங்களைப் பற்றி நான் என்ன பேசுவது? உங்களைப் பற்றி பேசினால், நானும் அதில் சேர்ந்திருப்பேனே? அப்போது என்னையே புகழ்ந்து கொள்வதாகுமே? அதைப்பற்றி பேசுவதா? நாம் இருவரும் சிறுவயதிலே தஞ்சை மாநகரத்திலே தெருத் தெருவாக சந்தோஷமாக பொறுப்பே இல்லாமல் அலைந்தோமே, அதைப் பற்றி பேசுவதா? அல்லது தஞ்சை கோவிலுக்கு சென்றோமே, சாமி கும்பிட அல்ல, காற்று வாங்குவதற்கு அதைப்பற்றி பேசுவதா?

பின்னர் தி.மு.க. வளர்ச்சிக்காக ஊர், ஊராக... தெருத் தெருவாக நாடகம் போட்டு வசூல் செய்தோமே, அதைப்பற்றி பேசுவதா? அல்லது உணவு கிடைக்காமல் தள்ளாடினோமே அதைப்பற்றி பேசுவதா? பின்னர் அங்கிருந்து சென்னை வருவதற்கு பணமில்லாமல் தவித்தபோது உங்கள் விரலிலே இருந்த மோதிரத்தை விற்று நாம் வீடு வந்து சேர்ந்தோமே அதைப்பற்றி பேசுவதா? எதைப் பற்றிய்யா பேசுவது?

நான் சினிமாவுக்கு வந்த பிறகு பராசக்திக்காக எழுதினீர்களே, அந்த வசனத்தைப் பேசி நடித்தேனே. அந்தப் படம் வெளிவந்த பிறகு ஒரே இரவிலே வானத்திலே சென்றேனே, அதைப் பற்றி பேசுவதா? ஒரு சமயம் எனக்கு நீங்கள் எழுதிக்கொடுத்த வசனத்தை என் அருமைச் சகோதரர் எஸ்.எஸ்.ஆர். அவர்களை பேச வைத்தீர்களே, அதைப் பற்றி பேசுவதா? அதற்காக நான் உங்கள் மீது கோபித்துக் கொண்டேனே அதைப் பற்றி பேசுவதா? பின்னர் “அதற்காக கோபித்துக்கொள்ளாதே கணேசா, இதோ நான் எழுதிக்கொடுக்கிறேன்” என்று அரை மணி நேரத்திலே ஒரு வசனத்தை எழுதிக்கொடுத்தீர்களே, அதைப்பற்றி பேசுவதா? அதைத்தானே நமது அருமைக் கண்மணி சிவக்குமார் பேசிக் காட்டினான்.

“காவிரி தந்த தமிழகத்து புது மணலில் களமமைத்த சேர, சோழ, பாண்டிய மன்னர், கோபுரத்து கலசத்தில் யார் கொடிதான் பறப்பதென்று இன்று போல் போர் தொடுத்துக் கொண்டிருந்த காலமது” என்று எழுதினீர்களே...

அப்போது உங்களுக்கும், எனக்கும் இடையே ஒரு போட்டி. உங்களது எழுத்து சிறப்பாக இருந்ததா? அல்லது நான் சிறப்பாக பேசினேனா என்று. ஆனால் மக்கள் சொன்னார்கள்; இரண்டுமே நன்றாகத்தான் இருந்தது என்று. அதைப் பற்றி பேசுவதா? எதைப்பற்றி பேசுவது?



நடிகர் திலகம்

சிவாஜி கணேசன்

நான் எதைப்பற்றி பேசினாலும் நான் உங்கள் கூட வந்து கொண்டிருப்பேனே... நீங்கள் வாழ வேண்டும். பல்லாண்டு வாழ வேண்டும். உங்களை நம்பி ஆயிரக்கணக்கான, கோடிக்கணக்கான பேர் இருக்கிறார்கள் இந்த தமிழகத்திலே... உங்களை நம்பி ஒரு மாபெரும் இயக்கமே இருக்கிறது தமிழகத்திலே... அதனை நீங்கள் காப்பாற்ற வேண்டாமா? அதற்காகவே நீங்கள் வாழ வேண்டும்.

என் அருமை கண்மணி பாரதிராஜா சொன்னானே, எங்கள் வயதை உங்களுக்குக் கொடுக்கிறோம் என்று. அதைப்போல் நான் சொல்கிறேன். அவன் இளைஞன் எத்தனை வயதை வேண்டுமானாலும் கொடுக்கலாம். நான் வயதானவன் நான் சொல்கிறேன். என்னுடைய வயதிலே இரண்டை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். இரண்டு மட்டும்தான். அவ்வளவு நாள் இருக்கிறேனோ, இல்லையோ தெரியாது. எனக்காக யாரும் கவலைப்படப் போவதில்லை. என் மனைவி மட்டும்தான் கவலைப்படுவாள். ஆனால் அவளுடைய சகோதரனுக்கு இரண்டு வயதை நான் கொடுக்கிறேன் என்று தெரிந்தவுடன் மிகவும் ஆனந்தப்படுபவளும் அவள்தான்.

ஆக; நீங்கள் நீண்டு வாழ வேண்டும். தமிழகத்திலே பல்லாண்டு இருக்க வேண்டும். உங்களால் தமிழ் வளர வேண்டும். இன்னும் வளர வேண்டும். நீங்கள் இன்னும் எழுத வேண்டும். வயதானாலும் அதனைப் பேசி நானும் நடிக்க வேண்டும். இந்த வயதான காலத்திலும்கூட எவ்வளவு சுயநலமப்பா... எதற்கப்பா... எதற்காக நான் நடிக்க வேண்டும். உன் வசனத்தை நான் பேச வேண்டும், அதற்காக நான் நடிக்க வேண்டும்.

கலைஞரே, என் உயிரே, என் அருமை நண்பா, பல்லாயிரமாண்டு வாழவேண்டும். உன்னுடைய தமிழ், உன்னுடைய அரசியல், உன்னுடைய குடும்பம் ஆல் போல் தழைக்க வேண்டும். அறுகுபோல் வேரூன்ற வேண்டும். பல்லாண்டு, பல்லாண்டு வாழ்ந்து நீங்கள் இந்த நாட்டிற்கு சேவை செய்ய வேண்டும். இது என்னுடைய இதயத்தின் அடித்தளத்தில் இருந்து எழுகின்ற அன்பான வாழ்த்து. என் வாழ்த்தோடு என் அருமைத் தலைவர் காமராசருடைய ஆவியும் உங்களை வாழ்த்தும் என்று கூறி விடைபெறுகிறேன்”.

**(1998 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு திரையுலகினர் எடுத்த பாராட்டு விழாவில் தலைமை உரை!)**

# போராடு! இதுதான் - கலைஞர் வாழ்க்கை நமக்குச் சொல்லும் செய்தி!



இப்போதுதான் நான் முதல்வர் அவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். இதே மேடையில் இப்போது தான் முரசொலி விழா நடைபெற்றது மாதிரி உள்ளது. மீண்டும் ஒரு விழா, அதிலேயும் அவர் தான் கதாநாயகர், கலைஞரும் ஒரு பத்திரிகையாளரே. என் நெடுநாள் நண்பர் ‘நலம்விரும்பி’ என் தமிழ்ஆசான் கலைஞரின் மகன் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களே, ஆலமரத்தின் அடியில் விருட்சங்கள் வளராது என்ற பொதுக்கூற்றை முறியடித்து தானும் ஒரு விருட்சமாக வளர்ந்திருப்பதற்கு வாழ்த்துகள்.

ஜனநாயகம், சமூக நீதி, கூட்டாட்சிக்குக் குரல் என்று தென்னிந்தியாவின் முக்கியத் தலைவராக திகழ்ந்து கொண்டிருக்கிறார். சமூகத்தின் எந்தப்பிரிவு மக்கள் பலன் பெற்றார்கள் என்பதுதான் முக்கியம். தாழக்கிடப்பவரை தற்காப்பதே தர்மம். கலைஞரின் தர்மம் அசோகச் சக்கரத்தின் தர்மம். கடந்த நூற்றாண்டு தமிழக வரலாற்றின் முதல் 50 ஆண்டுகள் பெரியார், அண்ணா யுகம் என்றால் அடுத்த 50 ஆண்டுகள் கலைஞரின் யுகம்.

போராடு! இதுதான் கலைஞரின் வாழ்க்கை நமக்குச் சொல்லும் செய்தி!! பள்ளியில் அனுமதி கிடைக்கவில்லை என்றதும் குளத்தில் குதித்து தற்கொலை செய்து கொள்வேன் என்றார். அதில் இருந்து ஆரம்பிக்கிறது. ஆதிக்க சாதி வீட்டில் நாயனம் வாசிக்க மாட்டேன். இடுப்பில் துண்டை கட்டிக் கொண்டு மேல்சாதிக் காரனை பணிந்து நாயனம் வாசிக்க மாட்டேன் என்று சிறு வயதிலே மறுக்கும் தன்மை அவருக்கு இருந்தது. கொள்கைக்காக காதலை தியாகம் செய்த கதைகளை எல்லாம் நான் சிறுவனாக இருந்தபோது கேட்டு இருக்கிறேன். இரண்டு முறை ஆட்சிக் கலைப்பு, இரண்டுமுறை கட்சியில் பிளவு, மிசா எமர்ஜென்சி, நள்ளிரவில் கைது. வயோதிகம் வந்து, மரணத்திற்குப் பிறகும் தனக்கு ஆயுள்கேட்டுப் போராட்டம். குளவிக் கூட்டின் புழு போல கொட்டப்பட்டுக் கொட்டப்பட்டே தயாரிக்கப்பட்டவன் என்பதே அவர் கூற்று. பேருந்துகளை நாட்டுடைமை ஆக்குதல். அதில் திருக்குறள். வள்ளுவர் கோட்டம், திருவள்ளுவர்சிலை, குறளோவியம், எந்த அளவிற்கு பாதித்து இருக்கு என்றால் வட்டார வழக்கு சென்னை பாஷையில் நான் படத்தில் பேசுவேன், ‘டுவல் பி’ யில் வள்ளுவர் என்னய்யா சொல்லி இருக்காரு அப்படி என்று தமிழைக் கொண்டு சேர்த்த ஆசான் அவர். எனக்கும் அவர் ஆசான். எழுத்தாளர்களை ஆதரித்தார்.

மருத்துவப் படிப்பு, விருதுகள், பொற்கிழி, நல உதவிகள் என்று கொடுத்து எழுத்தாளர்களை தோள் கொடுத்து தாங்கிய ஒரு எழுத்தாளர். உலகத்தமிழ் மாநாடு, உலகத்தமிழ் இணையக் கழகம், தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து. தமிழ் விசைப் பலகை, தமிழ்ப்பெயர் வைத்தால் திரைப்படங்களுக்கு வரி விலக்கு.

கலைஞர் எழுதியவை 178 புத்தகங்கள். சுமார் இரண்டு லட்சம் பக்கங்கள் வரும். காந்தியாருக்கு அடுத்தபடியாக இத்தனை பக்கங்கள் எழுதிய ஒரே அரசியல் தலைவர் இவர் தான்.

அவர் வசனம் எழுதிய பேப்பரை – நான் வேறு தலைமுறை, அவர் வேறு தலைமுறை – மாடர்ன் தியேட்டர்சில் அதனை பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். அதனை பார்க்கும் பெரும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அதனை நானே அவரிடம் சொல்லி, அதற்கான காரணங்களைக் கேட்டேன் ‘எதற்காக இப்படி எழுதினீர்கள்’ என்றேன். அது ஒரு தன் பாடமாக எனக்குத் திகழ்ந்தது. காட்சியைச் சொல்லும் போது மிக நுணுக்கமாக அதனை எப்படி அமைத்தால் நன்றாக இருக்கும் என்று டைரக்டர் கோபிக்காமல் அதனை புத்தகமாகச் சொல்லிஇருக்கிறார். ஏனென்றால் அந்தக் காலத்தில் ஷாட் என்பதை எழுத்தாளர்கள் சொல்லக் கூடாது. டைரக்டர் தான் முடிவு செய்யவேண்டும். இருந்தாலும் அவருடைய மனம் புண்படாமல் தனக்குத் தேவையான, காட்சிக்குத் தேவையான செய்தியைக் கொண்டு சேர்க்கும் அந்தச் சாதுர்யம் அப்பவே இருந்திருக்கிறது.



கலைஞானி

கமலஹாசன்

அதனை நான் சொன்னேன், சிரித்துக் கொண்டார். “அதனைக் கவனித்தியா நீ, நல்ல வேளை டைரக்டர் கவனிக்கவில்லை” என்றார். எக்ஸ்பிரஸ் வேகத்தில் கலைஞர் திரைக்கதை எழுதுவார் என்று கேள்விப் பட்டு இருக்கிறேன். கலைவாணர் வீட்டில் திரைப்படத்திற்காக எழுதி குவித்த பேப்பர்கள் நாலாபக்கமாக பறக்குமாம், அதனை கலைவாணர் எடுத்து பொறுக்கி அடுக்கி வைப்பார். அதனை இந்த அரங்கத்தில் சொல்வது எனக்குப் பெருமையாக இருக்கிறது.

இப்படிப்பட்ட மாபெரும் எழுத்தாளருக்கு நான், சினிமாவிற்காக எழுத ஆரம்பித்த பிறகு கதைகளை விவாதிப்பதும், அவரிடம் எடுத்துச் சொல்வதும் அப்படி தொடர்ந்து எனக்கு ஆசானாகவே இருந்தார். நான் இத்தாலி சென்று வந்தபோது இத்தாலியில் எரிமலைக் குழம்பில் செய்த பேனா ஒன்றைப் பரிசளித்தேன். அந்தப் பேனாவை யாராவது முன்னாடியே கொடுத்திருந்தால் அந்த ‘பராசக்தி’ மாதிரி பலபடங்கள் பிறந்து இருக்கும். அது சரியான கையில்தான் சென்று சேர்ந்தது. எரிமலைக் குழம்பில் செய்த பேனாவைக் கொடுத்தேன் என்ற பெருமை எனக்கு.

மருதநாயகம் விழாவில் கலைஞானி என்ற பட்டத்தை அவர் எனக்கு கொடுத்தார். அந்தப் பட்டம் எனக்குத் தங்கி விட்டது.

தசாவதாரம் படம் எடுத்துக்கிட்டு இருந்த போது “என்ன பண்ணிக்கிட்டு இருக்கே” என்று கேட்டார். “மேங்ரோஸ் எல்லாம் அழிந்துக்கிட்டு வருது, அதற்காக பூவராகவன் என்கின்ற ஒரு கேரக்டர். அவர் அதற்காக போராடுகிற மாதிரி வைத்து இருக்கேன்” என்றேன். டக்கென்று எழுந்தார். அந்தப் படத்தை பார்த்துவிட்டு, அவர் என் கன்னத்தைக் கிள்ளிக் கொஞ்சியது எனக்கு இன்னமும் ஞாபகத்தில் இருக்கிறது. அப்புறம் “எப்படி எடுத்து இருக்கிறான் பாருய்யா, இங்கிலீஸ் படம் மாதிரி எடுத்து இருக்கிறான்” என்று கூறினார். நான் இல்லாத இடத்தில் எல்லாம் பல பேரிடம் அவர் இப்படிக் கூறியது எனக்கு செவி வழிச் செய்தியாக வந்தது.

விசுவரூபம் பிரச்சினை வந்தது. அப்போது அவர் எனக்குப் போன் போடுகிறார். எங்கே இருக்கிறேன் என்று கண்டுபிடித்து அப்போ நான் ஏதோ ஒரு ஹோட்டலில் இருக்கிறேன். “கவலைப்படாதே” என்று கூறினார். “ஏதேனும் உதவி வேண்டுமா” என்று கேட்டார். “வேண்டாம்ய்யா இது தனிப்பட்ட பிரச்சினை, நானே பார்த்துக்கொள்கிறேன்” என்றேன். “ஏதாவது முடியவில்லை என்றால் எப்போது வேண்டுமானாலும் வா” என்றார், என்னை மாதிரி சுதந்திரத்தை நம்புபவன், பேச்சு சுதந்திரதை நம்புபவன் பகுத்தறிவை நம்புபவன், எப்போதும் ஒரு தொலைபேசிக்கு அப்பால் நமக்காக ஒரு உதவிக்கரம் தயாராக இருக்கிறது என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். அந்த நம்பிக்கையை எனக்கு விடாமல் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு இருந்தார், விமர்சனங்களையும்தான்.

காவேரி மருத்துவமனைக்கு போகிறார், அப்போது வைத்தியர் வந்து “அய்யா, கொஞ்சம் நல்லா மூச்சை இழுத்து விடுங்க” என்கிறார், அப்போ கலைஞர் “மூச்சை விடாமல் இருப்பதற்காகத்தான் இங்கே வந்து இருக்கேன்” என்று கூறுகிறார், அந்தத் தருணத்திலும்.

இந்தியாவிலேயே முதல்முறையாக தொழில் துறைக்கு பாலிஸி டாக்குமெண்ட், சிப்காட் என்ற தொழில் பேட்டைகள் தொழிலுக்கு உகந்த உள் கட்டமைப்பு, பொறியியல் நுழைவுத்தேர்வு ரத்து, முதல் முறையாக பட்டதாரி கல்விக் கட்டணச் சலுகை, டைடல் பார்க், பெண்களுக்கு இட ஒதுக்கீடு, பெண்களுக்கு சொத்தில் பங்கு, கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு, பெரியார் நினைவு சமத்துவபுரம், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் சட்டம், குடிசை மாற்று வாரியம் – எத்தனை பட்டியல் இருக்கிறது பாருங்கள்.

அதனால் தான் கூறினேன் முதல் 50 ஆண்டுகள் அண்ணாவுக்கும், பெரியாருக்கும் உரியது. அடுத்த 50 ஆண்டுகள் கலைஞருக்குரியது. அந்த ஆலமரத்தடியில் இன்னொரு ஆலமரம் உருவாகி இருக்கிறது என்பது வியத்தகு நிகழ்வு. முரசொலி விழாவிற்கு வரும்போது என்ன சந்தோஷம் அதில் இருந்ததோ, அதற்கு நிகரான சந்தோஷம் இந்த விழாவிலும் எனக்கிருக்கிறது.

**‘கலைஞர் 100 - விகடனும் கலைஞரும்’ நூல் வெளியீட்டு விழாவில் கலைஞானி கமலஹாசன் உரை (20.9.2023)**